**அம்பன்கங்ககோரளை பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

-------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 மார்ச் 14 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பன்கங்க கோரளை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் கிடைக்க வேண்டிய ரூபா 160,500 ஆன முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகள் சரி செய்யப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் ரூபா 123,775 பெறுமதியான டயர் மற்றும் வாகன பட்டரி உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | முன்னைய ஆண்டுகளுக்குரியதாக கிடைத்திருந்த ரூபா 90,070 ஆன வட்டித் தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உடன்படிக்கை செய்யப்படாத ரூபா 550,000 பெறுமதியான 08 செயற்திட்டங்களின் பெறுமதி கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (உ) | கைத்தொழில் பிணை வைப்பு மீதியொன்று இல்லாமல் இருந்த போதும் நிதிக கூற்றுக்களில் ரூபா 40,803 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆராய்ந்து பார்த்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய கணக்குகள்<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 31,790,435 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட மற்றும் 05 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 208,491 உம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யப்படாத ரூபா 2,991,645 உம் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பெறவேண்டிய வருமானங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெறவேண்டிய வருமானங்களை பெற்றுக்கொள்ள துரிதமாக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள்<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 29,355,898 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட மற்றும் 05 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 363,355 உம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யப்படாத ரூபா 1,689,632 உம் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | செலுத்த வேண்டிய மீதிகளை கொடுப்பனவு செய்யவும் தீர்வுசெய்யவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செலுத்த வேண்டிய மீதிகளை கொடுப்பனவு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

1.3.3 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 3,530,691 கூட்டுத் தொகையான 13 கணக்கு விடயங்களை தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கு விடயங்களுக்குரிய அட்டவணைகள் மற்றும் கோவைகள் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த 13 கணக்கு விடயங்களுக்குரிய தகவல்களை தேடிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

1.4 இணங்காமைகள்

சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) 2008 திசெம்பர் 31 ஆம் திகதி 30/2008 ஆம் இலக்கம் | இடர் கடன் கொடுப்பனவு ஆகக்கூடியது ரூபா 250,000 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வெல்லையை மிகைத்து 5 உத்தியோகத்தர்களுக்கு கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்கம் | 8 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எரிபொருள் எரிவு பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 2018 செப்தம்பர் 14 ஆந் திகதிய மமா/உ.ம.ஆ/2018/08 ஆம் இலக்க் மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் வருக பதிவு செய்வதற்காக கைவிரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை . | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | கைவிரலடையாள இயந்திரத்தை நிறுவ எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 415,614 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 803,539 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

----------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப ்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவா று மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 27,500 | 17,566 | 17,431 | 3,886 | 101,000 | 12,005 | 10,258 | 50,638 |
| (ii) | வாடகை | 215,000 | 122,840 | 123,360 | 19,820 | 147,000 | 96,600 | 105,030 | 16,160 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 396,000 | 364,505 | 364,505 | - | 335,100 | 294,016 | 294,016 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,496,600 | 4,033,215 | 4,031,088 | 1,672,702 | 4,926,732 | 3,276,844 | 3,276,844 | - |
| | மொத்தம் | 6,135,100 | 4,538,126 | 4,536,384 | 1,696,408 | 5,509,832 | 3,679,465 | 3,686,148 | 66,798 |

**2.2.2 நீர் கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 பாவனையாளர்களி மிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர்க் கட்டணங்கள் ரூபா 71,730 ஆக காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீர்க்கட்டணங்கள் அறவிடுவதற்கு நடமாடும் அலுவலகங்கள் ஆரம்பித்து அறவட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | வருட இறுதியில் காணப்பட்ட நிலுவை மீதியில் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்ட 52 பாவனையாளர்களிடமிருந்து ரூபா 91,270 அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவையாக உள்ள துண்டிக்கப்பட்ட இடங் களுக்காக இணக்க சபைக்கு ஆரம்பமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 08 நீர் விநியோகத் திட்டங்களின் நீரின் தூயதன்மை தொடர்பாக ஆய்வுகூட பரிசோதனையொன்று மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தரமான தூய குடி நீர் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மிக விரைவில் நீர் மாதிரி பரீட்சிக்கப்பட்டு தர பரிசோதனை அறிக்கை யொன்று வழங்குமாறு எழுத்துமூலம் கோரப்பட்டுள்ளது. |

**2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 375,367 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,032,100 ஆகவும் இருந்தது. | பெறவேண்டிய வருமானங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெற வேண்டிய நீதிமன்ற தண்டப் பணத் தொகை மற்றும் முத்திரைக் கட்டணங்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) **கைவிடப்பட்ட பணிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 550,000 பெறுமதியான பெறுமதியான 08 அபிவிருத்தி முன்மொழிவுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட விடயங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) **பணிகளை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| குறித்த காலப்பகுதியில் செயற்திட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் கிராம சக்தி மக்கள் வியாபார வேலைத்திட்டத்தின் கீழ் கிராம சக்தி பிரதேசங்களில் 19 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய ரூபா 14,400,000 ஆன நிதி ஏற்பாடு மீள அனுப்புவதற்கு நேர்ந்தது. | செயற்திறனாக திட்டமிடப்பட்டு நடவடிக்கை எடுத்த வேண்டும். | மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு காலமொன்று எடுத்தமை, மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு சபைக்கு கிடைப்பதில் தாமதம், தேர்தல் காலமாக இருந்தமை போன்ற காரணங்களால் 19 செயற்திட்டங்களை செயற்படுத்தி பூர்த்தி செய்ய முடியாமையால் நிதிஏற்பாடு சபையால் இழக்கப்பட்டிருந்தது. |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்படாமல் இருந்ததுடன் அதற்குரிய திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கை தொடர்பாக அறிவினை பெற்றுக் கொண்டு எதிர்வரும் ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த 3 ஆண்டுகளில் 36 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் எந்தவொரு கட்டிடத்திற்கும் இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அனுமதி வழங்கப்படாத 60 விண்ணப்பங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ்களை வழங்குவதற்கும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாத விண்ணப்பங்கள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விடயங்களை ஆராய்ந்து இணக்கச் சான்றிதழ்களைப் வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்படாத அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென விடய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1996 ஆம் ஆண்டின் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பதிவேட்டிற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வீதிகள் பதிவேட்டினை நாளதுவரையாக்கல் வேண்டும். | அளவீட்டு நடவடிக்கைகளுக்காக தேவையான செலவினம் உட்பட போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் சிக்கல் அடிப்படையில் வீதி பதிவேடு நாளதுவரையாக்கப்பட வில்லை. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 7 பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்னிணைப்பு 02 மாதிரியை | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) இடமாற்றம் பெற்று சென்ற இரண்டு உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 296,945 ஆன இடர் கடன் மீதியொன்றும் ரூபா 7,500 ஆன விழா முற்பண மொன்றையும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் | இரண்டு உத்தியோகத்தர் களிடமிருந்து இடர் கடன்களை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**3.4.1 கையேற்கப்படுத்தப்படாத சொத்துக்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 வெளி நிறுவனங்களிடமிருந்து கிடைத்திருந்த 03 வாகனங்களையும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தை கையேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாகனங்களை சபையின் பெயருக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**3.4.2 செயலற்ற மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பல்நோக்கு கட்டிடத்திற்கு அருகிலான சிறுவர் பூங்கா சிறுவர்களுக்கு செல்வதற்கு சிக்கலான இடமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தினால் அது விளைவற்றுக் காணப்பட்டதுடன் பழைய நூலக கட்டிடமொன்றும் விளைவற்றுக் காணப்பட்டன. | கட்டிடங்கள் செயற்திறனான விடயங்களுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். | சிறுவர் பூங்கா கிராமப் புறத்தில் அமைந்துள்ளதால் சிறுவர்கள் வருகை தராமல் இருப்பதுடன் பழைய நூலக கட்டிடம் அபிவிருத்தி செய்யப்பட்டு கடைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றுத. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 10,779,226 பெறுமதியான 03 வாகனங்கள் மற்றும் சபைக்குச் சொந்தமான ரூபா 991,500 கூட்டுத்தொகையான கொங்கிரீட் கலவை இயந்திரமொன்றும் மின்பிறப்பாக்கியொன்றும் 06 ஆண்டு காலமாக விளைவற்ற வகையில் சேதமடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | இயந்திர உபகரணங்கள் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். | சாரதிகள் வெற்றிடமாக இருப்பதால் இவ்வண்டிக்கு சாரதியொருவரை ஈடுபடுத்துவது சிரமமாக இருப்பதன் காரணத்தால் டிபர் வண்டி மற்றும் டம்ப் டிரக் வண்டி என்பன பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன. சிங்கல் கெப் வண்டி திருத்தம் செய்யப்பட்டு வருவதுடன் மின்பிறப்பாக்கி இயந்திரத்தை இதுவரை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் உருவாகியிருக்கவில்லை. |

## 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புஸ்ஸல்ல முதுன இல.01 கடையை குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகையாளரால் 2015 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கு பெற்றுக்கொண்ட கடைக்கு அருகாமையில் கடையொன்றை நிர்மாணித்திருந்ததுடன் மீண்டும் அக்குத்தகையாளரால் 2019 ஆம் ஆண்டின் போது அத்துமீறிய நிர்மாணமொன்று அவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகையாளர் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்பாடுகள் குறைவாக இருப்பதால் 2019 ஆம் ஆண்டின் புதிய மதிப்பீடொன்ற மேற்கொண்டு உடன்படிக்கையின் பிரகாரம் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.6 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 15 ஆந் திகதி வேலை முடிவடைந்திருந்த மெட்டிஹக்க இரண்டு கடைகளை கேள்வியில் வழங்குவதற்கு முடியாமையால் மூடப்பட்டிருந்த காரணத்தினால் 2019 ஏப்ரல் 01 முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 1,581,000 நட்டமொன்று சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது. | முறையாக நடவடிக்கை எடுத்து கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள சகல நடவடிக்கைகளையும் சபையின் நிதிக்குழு மற்றும் கேள்விச் சபை மூலம் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு இனங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வு திட்டமொன்றும் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வுத் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயலாளர் பதவி மாற்றமடைந்தமையால் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. |
| (ஆ) உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தருக்கு வெவ்வேறு விடய கடமைகள் கையளிக்கப்பட்ட காரணத்தினால் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை போதியளவிலும் சுயாதீனமாகவும் மேற்கொள்ள முடியாதிருந்தது. | உள்ளக கணக்காய்வு சுயாதீனமாக பேணிச்செல்லல் | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தருக்கு வெவ்வேறு விடய கடமைகள் கையளிக்கப்பட்டிருந்த போதும் பதவியணி பற்றாக்கறை காரணமானக தமது விடயத்தை முழு சுயாதீனமாக செய்யும் இயலுமை இல்லாமையால் நிதிப்பொறுப்புக்கள் குறைவாதக கையளிக்கப்பட்டுள்ளன. |